புதுச்சேரி அரசு

துணைநிலை ஆளுநர் செயலகம்

**No. LGS/PRO/2021** **05 செப்டம்பர், 2021**

## பத்திரிகை செய்தி...

வ.உ.சி கல்வி குழுமம் சார்பில் இந்திய விடுதலைப் போராட்ட வீரர் 'கப்பலோட்டிய தமிழன்' வ.உ. சிதம்பரனாரின் 150-வது பிறந்த நாள் விழா தூத்துக்குடியில் இன்று(05-09-2021) சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

மாண்புமிகு துணைநிலை ஆளுநர் டாக்டர். சௌந்தரராஜன் இன்று காலை தூத்துக்குடி, ஒட்டப்பிடாரத்தில் உள்ள வ.உ.சி. இல்லத்தில் அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து, மலர்தூவி மரியாதை செலுத்தினார். அதனைத் தொடர்ந்து தூத்துக்குடி பழைய நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள வ.உ.சி உருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.